| Roll No. | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 56 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 56 ] [ Total No. of Printed Pages : 24

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T** **ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ**

**Code No. : 85-T** **Subject : SOCIAL SCIENCE**

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

ದಿನಾಂಕ : 10. 04. 2013 ] [ Date : 10. 04. 2013

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | | Q. No. | Marks | | Q. No. | Marks | | Q. No. | Marks | | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | 14. | | | 27. | | | 40. | | | 53. | |
| 2. | | | 15. | | | 28. | | | 41. | | | 54. | |
| 3. | | | 16. | | | 29. | | | 42. | | | 55. | |
| 4. | | | 17. | | | 30. | | | 43. | | | 56. | |
| 5. | | | 18. | | | 31. | | | 44. | | | × | |
| 6. | | | 19. | | | 32. | | | 45. | | | × | |
| 7. | | | 20. | | | 33. | | | 46. | | | × | |
| 8. | | | 21. | | | 34. | | | 47. | | | × | |
| 9. | | | 22. | | | 35. | | | 48. | | | × | |
| 10. | | | 23. | | | 36. | | | 49. | | | × | |
| 11. | | | 24. | | | 37. | | | 50. | | | × | |
| 12. | | | 25. | | | 38. | | | 51. | | | × | |
| 13. | | | 26. | | | 39. | | | 52. | | | × | |
| | | | | | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ | |
| 2. ✓ | | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை ( Subjective type ) வினாக்கள் என மொத்தம் 56 வினாக்கள் உள்ளன.

ii) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நீங்கள் சரியான விடை என தேர்வு செய்த விடையை அவ்விடைக் குறியீட்டுடன் முழுவதுமாக எழுத வேண்டும்.

iii) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கு ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

iv) பல்வகை விடை வினாவகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலில் எழுதுதல் கூடாது. ( வரைபடங்கள், படங்கள் மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vi) பல்வகை வினா-விடை வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல் மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறினால் விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதெற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

I. கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமை பெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete Statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியானது அல்லது மிகப்பொருத்தமானது. சரியான விடையை தேர்ந்தெடுத்து, அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் குறியீட்டு எழுத்துடன் முழு விடையையும் எழுத வேண்டும் : $15 \times 1 = 15$

1. நாடு முழுவதும் அனைத்து பருவங்களுக்கும் ஏற்ற சாலைகளை ( Trunk road ) அமைக்க திட்டமிட்ட கவர்னர் ஜெனரல்

   (A) டல்ஹவுசி பிரபு

   (B) வில்லியம் பெண்டிங் பிரபு

   (C) காரன்வாலிஸ் பிரபு

   (D) வெல்லெஸ்லி பிரபு.

*விடை :* ______________________________

2. ஆங்கிலேயர்களுக்கு எதிராக எழுதியதற்காக சிறையில் அடைக்கப்பட்ட பீஜாப்பூரைச் சேர்ந்த பத்திரிக்கை நிருபர்

(A) ஜெய ராவ் நர்குண்ட் ( Jaya Rao Nargund )

(B) R. R. திவாகர்

(C) ஹனுமந்தா ராவ் மோகாரே ( Hanumantha Rao Mohare )

(D) K. C. ரெட்டி.

*விடை :* ____________________

3. ஒரிசாவில் குடியேறியுள்ள கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு இருப்பிடம் வழங்குவதற்கென மேற்கொள்ளப்பட்ட திட்டம்

(A) ஹிராகுட் திட்டம் ( Hirakud project )

(B) கங்கா-காவேரி திட்டம் ( Ganga-Cauvery project )

(C) தண்டகாரண்யா திட்டம் ( Dandakaranya project )

(D) முன்ட்காட் மற்றும் பய்லுகுப்பே திட்டம் ( Mundgod and BailuKuppe project ).

*விடை :* ____________________

4. பின்வரும் வரிசைகளில் அணிசேரா இயக்க ( NAM ) தலைவர்களின் சரியான வரிசை எது ?

(A) சுகர்னோ, முசோலினி, நேரு, நாஸ்ஸர்

(B) நேரு, காந்திஜி, நாஸ்ஸர், டிட்டோ

(C) சுகர்னோ, நாஸ்ஸர், டிட்டோ, நேரு

(D) டிட்டோ, நாஸ்ஸர், நேரு, அடால்ஃப் ஹிட்லர்.

*விடை :* ____________________

5. புதிய ஒப்பந்தத்தின் ( New Deal Policy ) விளைவு யாது ?

(A) U.S.A. மீண்டும் பொருளாதார வல்லரசு ஆனது

(B) U.S.A. மற்றும் சீனா இடையே நட்புறவு வளர்ந்தது

(C) அமெரிக்கா இரண்டாம் உலகப்போரில் நுழைந்தது

(D) அமெரிக்கா பியர்ல் ஹார்பரில் உள்ள கட்டுப்பாட்டை இழந்தது.

*விடை :* ______________________________

6. ஹிட்லர் ஜெர்மனியை சேர்ந்தவர், ஆனால் முசோலினி .................... ஐ சேர்ந்தவர்.

(A) அமெரிக்கா

(B) இரஷ்யா

(C) இத்தாலி

(D) சீனா.

*விடை :* ______________________________

7. பெண்களை அதிகாரம் மிக்கவர்களாக ஆக்கும் ஆண்டு ( Women empowerment year ) என அறிவிக்கப்பட்ட ஆண்டு

(A) 2001

(B) 2010

(C) 1999

(D) 2004.

*விடை :* ______________________________

8. ஒருவரின் பிராந்தியம் அல்லது மாநிலத்தின் மீதுள்ள தனிப்பட்ட பற்று அல்லது விசுவாசம்

(A) வகுப்புவாதம் ( Communalism )

(B) பிராந்திய உணர்வு ( Regionalism )

(C) மொழிப்பற்று ( Linguism )

(D) சாதிப்பற்று ( Casteism ).

விடை : ______________________

9. இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள திபெத்தின் மதத்தலைவர்

(A) சூ-இன்-லாய்

(B) மா-சேதுங்

(C) தலாய் லாமா

(D) சன்யாட் சென்.

விடை : ______________________

10. பருவக்காற்றுக்கு முந்தைய மழைக்கு மாவடு உதிர் மழை என்ற பெயர் எங்கு வழங்கப்பட்டுள்ளது ?

(A) கர்நாடகா

(B) ஆந்திரப்பிரதேசம்

(C) தமிழ்நாடு

(D) கேரளா.

விடை : ______________________

11. மாகோகனி பசுமைமாறா காடுகளைச் சேர்ந்தது, ஆனால் பேரீட்சை மற்றும் பனை

(A) சதுப்புநில தாவரங்கள்

(B) வெப்பமண்டல இலையுதிர் தாவரங்கள்

(C) இமயமலைத் தாவரங்கள்

(D) பாலைவனத் தாவரங்கள்.

*விடை :* ____________________

12. சூரிய ஆற்றலை வளர்க்க இந்தியா முக்கியத்துவம் அளிக்க வேண்டும், ஏனெனில்

(A) இந்தியா இந்த ஆற்றலின் வளர்ச்சிக்கு ஏற்ற இடத்தில் அமைந்துள்ளது

(B) இது ஒரு நிலையில்லா ஆற்றல்

(C) இது தீர்ந்துவிடக்கூடிய ஆற்றல் மூலம்

(D) இது குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது.

*விடை :* ____________________

13. 'இந்தியாவின் ரூர்' எனப்படுவது ( Ruhr of India )

(A) சோட்டா நாக்பூர் பீடபூமி

(B) கோரக்பூர்

(C) மும்பை

(D) வட இந்திய சமவெளி.

*விடை :* ____________________

14. பொருட்கள், பொருட்களுக்கு மாற்றாக பரிமாறிக் கொள்ளப்பட்டால், இது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(A) மறு ஏற்றுமதி வணிகம் ( Entrepot )

(B) இறக்குமதி ( Import )

(C) ஏற்றுமதி ( Export )

(D) பண்ட மாற்றுமுறை ( Barter system ).

*விடை :* ______________________________

15. விவசாயிகளின் பிரச்சனைகளை களைய, கர்நாடக அரசு தொடங்கிய திட்டம்

(A) வேலைக்கு உணவு ( Food for work )

(B) விவசாயிகளின் நண்பன் ( Raita Mitra )

(C) இருபது அம்ச திட்டம் ( Twenty point programme )

(D) நில உடமை உச்சவரம்பு ( Ceiling on land holding ).

*விடை :* ______________________________

II. கோடிட்ட இடங்களை பொருத்தமான விடைகளைக் கொண்டு நிரப்புக : 5 × 1 = 5

16. மூன்றாவது கர்னாடிக் போர்களின் போது இருந்த பிரெஞ்சு கவர்னர் ............................................... .

17. அரசியல் நிர்ணய அவை ( Constituent Assembly )-யின் தலைவர் ............................................... .

18. இன வேற்றுமைக்கு எதிராக முதலில் குரல் கொடுத்தவர் ............................................... .

19. இந்தியாவில் அதிகபட்ச வெப்பநிலை பதிவு செய்யப்பட்ட இடம் ...............................................

20. கிராமப்புற மக்கள், தங்களை ............................................... தொழிற்சாலைகளில் அவர்களாகவே ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

III. 21. **பட்டியல்-அ** வில் உள்ளவற்றை **பட்டியல்-ஆ** வுடன் பொருத்தி சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக : 5 × 1 = 5

| **பட்டியல் - அ** | **பட்டியல் - ஆ** |
|---|---|
| (a) உச்சநீதிமன்றம் | (i) மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் |
| (b) தனி இன வாக்காளர்கள் | (ii) தயானந்த சரஸ்வதி |
| (c) D.A.V. பள்ளிகள் | (iii) அன்னிபெசண்ட் |
| (d) ஸ்திரி புருஷ துல்னா ( Stri Purusha Tulna ) | (iv) ஒழுங்குமுறைச் சட்டம் |
| (e) மத்திய ஹிந்து கல்லூரி | (v) தாராபாய் ஷிண்டே |
| | (vi) கர்னல் ஆல்காட் ( Col. Olcot ) |
| | (vii) இராஜாராம் மோகன் ராய் |
| | (viii) மான்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள். |

*விடைகள் :*

(a) ____________________

(b) ____________________

(c) ____________________

(d) ____________________

(e) ____________________

IV. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ***ஒரு*** வரியில் விடையளிக்க : $9 \times 1 = 9$

22. துணைப்படைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார் ?

23. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ( USA ) ஏன் முதல் உலகப்போரில் நுழைந்தது ?

24. அரசு ஏன் 'லோகாயுக்தா'வை அமைத்தது ?

25. சார்க் ( SAARC ) அமைப்பின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது ?

26. 'வீட்டோ' அதிகாரம் ( Veto power ) என்றால் என்ன ?

27. சதுப்பு நிலக்காடுகளின் ( **Mangrove forests** ) சிறப்பம்சங்கள் யாவை ?

28. குழாய் வழியாக கொண்டு செல்லப்படும் பொருட்கள் யாவை ?

29. 'மக்கள் நல அரசு' ( **Welfare state** ) என்றால் என்ன ?

30. ஐக்கியநாடுகள் அவை ( U.N.O. ) ஏன் அமைக்கப்பட்டது ?

V. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ***இரண்டு*** அல்லது ***மூன்று*** வரிகளில் விடையளிக்க : $16 \times 2 = 32$

31. தொட்டதேவராஜ உடையாரின் சாதனைகள் யாவை ?

32. இரண்டாவது ஆங்கிலோ-சீக்கிய போருக்கான காரணங்கள் யாவை ?

33. செய்தித்தாள்கள் எங்ஙனம் இந்தியர்களிடம் தேசப்பற்றையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த முடியும் ?

34. மைசூர் சலோ இயக்கத்தை ( Mysore Chalo movement ) தொடங்க ஏன் மைசூர் மாநில காங்கிரஸ் முடிவு செய்தது ?

35. இந்திய யூனியனுடன் ஜூனாகத் அரசு எவ்வாறு இணைக்கப்பட்டது ?

36. 1914 ம் ஆண்டு ஆஸ்திரியா ஏன் செர்பியாவை தாக்கியது ?

37. பர்மா எவ்வாறு விடுதலையடைந்தது ?

38. வகுப்புவாதத்தை கட்டுக்குள் வைக்க எங்ஙனம் இந்திய அரசு கடுமையாக முயற்சிக்கிறது ?

39. ஐ.நா. சபையின் ஒரு முக்கிய அங்கமாக பாதுகாப்பு சபை கருதப்படக் காரணம் என்ன ?

40. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்திற்கு இந்தியா தனது இசைவை அளிக்கவில்லை. ஏன் ?

41. தக்காண பீடபூமி அதிக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. விவரி.

42. உலகில், மைக்காவின் தேவை மிக அதிக அளவு உள்ளது. ஏன் ?

43. மேற்கு வங்காளத்தில் அதிக அளவு சணல் தொழிற்சாலைகள் உள்ளன. ஏன் ?

44. இந்தியாவில், சாலைகளின் பயன்பாடுகள் யாவை ?

45. சிறுதொழில் மற்றும் குடிசை தொழில்களுக்கு அரசு எவ்வாறு முன்னுரிமை அளிக்கிறது ?

46. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை ?

VI. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வரிகளில் விடையளிக்க : 6 × 3 = 18

47. போர்த்துகீசியர்கள், இந்தியாவில் அவர்களது ஆதிக்கத்தை எவ்வாறு நிறுவ முயற்சித்தனர் ?

48. 1857-ம் ஆண்டு கிளர்ச்சிக்கான நிர்வாக மற்றும் சமூக-சமய காரணங்கள் யாவை ?

49. இந்தியாவில் ஆரம்ப கல்வியை அனைவருக்கும் வழங்குவதற்காக அரசு எங்ஙனம் முயற்சி செய்கிறது ?

50. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மனித வளம் மிகவும் முக்கியமானது. இக்கூற்றை வலியுறுத்துக.

51. காஃபி மற்றும் தேயிலை இவற்றை பயிரிட உகந்த புவியியல் சூழ்நிலைகளைப் பட்டியலிடுக.

52. நமது ஐந்தாண்டு திட்டங்கள் தொடங்கிய காலத்திலிருந்தே நமது நாடு பாதகமான வெளிநாட்டு வாணிப பணம் செலுத்தும் சமநிலையை எதிர்நோக்க காரணங்கள் யாவை ?

VII. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ***பத்து*** வரிகளில் விடையளிக்க : $3 \times 4 = 12$

53. சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திர போராட்டத்தில் மிக முக்கிய பங்காற்றினார். விவரி.

54. ஐ.நா. சபை வெற்றிகரமாக, பெரிய அளவிலான போர்கள் நிகழாமல் தடுத்தது.

இக்கூற்றை நியாயப்படுத்துக.

55. இந்தியா ஒரு விவசாய நாடாக இருந்த போதிலும் அது இன்னமும் விவசாயத்தில் பின்தங்கியுள்ளது. காரணங்கள் தருக.

VIII. 56. இந்தியாவின் நிலவரைபடத்தை வரைந்து அதில் கீழ்வருவனவற்றை குறிப்பிடுக :

1 + 3 = 4

a) மன்னார் வளைகுடா

b) விசாகப்பட்டினம்

c) நவ சேவா ( Nava Seva ).

<u>கண்பார்வையற்ற மாணவர்கட்கான மாற்று வினா :</u> ( வினா எண். 56 க்கு பதிலாக )

இமயமலையின் சில பயன்களைத் தருக. 4